### Editor's Note

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' Uduvil, Chunnakam

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 143 JAFFNA, FRIDAY, 7th JANUARY, 1983 No. 1

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

### Subscription

Inland: Rs. 35/- per year.

Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

**The Manager,**

'Morning Star', Vaddukoddai.


*JDCSI*

## Kankesanthurai Church

A special Service of Thanksgiving to mark the installation of electricity at the K. K. S. Church was held on the 25th of December at 4.30 p. m. The lights which were dedicated by the Revd. D. R. Ambalavanar, the Circuit Pastor, were switched on by Mrs. D. R. Ambalavanar, Mrs. Sam Thambu and Mrs. Prince Ratnam. This was followed by the lighting of candles by the office bearers of the K. K. S. Church Ladies Guild.

The Christmas and Holy Communion Service was conducted by Rev. D. R. Ambalavanar assisted by the Revds. N. W. G. Sugunarajah and Sam Thambu. A special Prayer of Thanksgiving was offered by Mr. Prince Ratnam, the Worker in Charge of the Church. This was followed by a public meeting held in the school hall which was presided over by Rev. D. R. Ambalavanar. Rev. Ambalavanar in his address traced the growth of the Church during the last two years and said how God's abundant mercies had sustained them during these difficult times. A vote of thanks for all those who helped towards the electricity project was moved by Mr. S. Thurairajasingam, the Treasurer of the Church. In his remarks he made special mention of the part played by the Worker in charge of the Church and his untiring efforts in the building up of the Church in all spheres. Mr. Prince Ratnam in his address made special mention of the great help and guidance that was always given to the K. K. S. Church by the Bishop the Rt. Rev. D. J. Ambalavanar, The Revds. D. R. Ambalavanar, N. W. G. Sugunarajah, Sam Thambu, R. Thurairajah, Director of the Christian Communications Centre, Rev. Sam Alfred of the Christa Seva Ashram and all the Presbyters and Workers of the Jaffna Diocese. He also mentioned the great part played by each and every member of the K. K. S. Church in building up the Church. He thanked also all those who generously contributed towards the electricity fund. The meeting was followed by a Fellowship Tea provided by the members of the Church.

The day's programme terminated with a Prayer by Rev. R. Thurairajah and the Benediction pronounced by Rev. D. R. Ambalavanar.

### Dedication of Prayer Hall

The First Service at the new Evangelical Centre at Kankesanthurai was held on the 25th of December at 6.30 p. m. The Service was conducted by Rev. D. R. Ambalavanar, the Circuit Pastor. He was assisted by Rev. R. Thurairajah, Director of the Christian Communication Centre and Mr. Prince Ratnam, the

## Nigerian Students in India

Delhi police detained recently 309 Nigerian students who were protesting before their High Commission against a Nigerian government decision to declare invalid all Indian University degrees, except those from Delhi University.

The Indian Express daily reported recently that the Lagos decision is believed to have been made in order to sharply reduce the number of Nigerian students in India. There are currently over 7,000 of them in New Delhi, many of them in the northern Indian city of Chandigarh.

*Wedding*

### Hastings — Rajasingam

The marriage of *Wijendran Hastings*, son of the late Herbert Hastings and Mrs. H. L. Hastings of Uduvil and *Thayalini Rajasingam*, younger daughter of Mr. C. E. Rajasingam and Mrs Rajasingam of Uduvil was solemnised at the CSI Church, Uduvil on Monday, the 27th of December at 4.30 p. m.

Rev. N. W. G. Sugunarajah officiated at the ceremony, assisted by Sevak Rev. Sam S. Alfred. Rev. D. R. Ambalavanar, the Presbyter of the Tellippalai Church, preached the homily.

* * *

### Mills — Anandarajan

*Culam* son of the late Rev. K. J. Mills, former Presbyter of the JDCSI and of Mrs. Mills and *Sorna*, daughter of Mr. and Mrs. C. E. Anandarajan were joined in Holy Matrimony at the St. John's Church, Chudiculi on Monday, December 27th 1982 at 8.30 a. m.

The couple is expected to leave shortly for the States.

Worker in charge of the K. K. S. Church. The new Prayer Hall was dedicated by Rev. D. R. Ambalavanar and a special Prayer of Thanksgiving was offered by Rev. R. Thurairajah.

The Prayer Hall was erected by the members of the K. K. S. Town Council Labour Union. It was very encourageing to see that many non-Christians had rallied round to make all the arrangements for this Service and a very large crowd was present.

A special New Year Service was held at Evangelical Centre on the 1st of January at 6.30 p. m. The Service was conducted by Rev. D. R. Ambalavanar assisted by Mr. Prince Ratnam. A unique feature of the Service was that at the end of the Service many knelt down to be individualy blessed by Rev. Ambalavanar.

The K. K. S Church will be holding regular Sunday Services at the Centre at 6.30 p. m. Plans are also being drawn up to put up a Chapel here very soon.

*JDCSI*

## Inuvil Church

The First Annual Dinner of the Inuvil Church Youth Fellowship was held in the Mcleod Hospital premises on Wednesday, December 29, 1982. The President of the Youth Fellowship Miss Sithamparappillai welcomed the Chief Guest, Dr. (Mrs.) Jeyarajasingham and other guests who included members of the Executive Committee of the Inuvil Church and members of the medical staff of the Mcleod Hospital.

The Youth Fellowship of the Inuvil Church is active under the leadership of the Young Worker at Inuvil, Mr. V. Rajkumar who has been largely responsible for the 'life' he has infused into the small Church at Inuvil, one of the younger members of the JDCSI 'family'.

The Youth Fellowship of the Church has some 25 members.

## 1983 — Important Dates in our Church Calender

| | | |
|---|---|---|
| Jan. | 18 — 25 | Unity Week |
| Feb. | 13 | Hospital Sunday |
| | 16 | Ash Wednesday |
| Mar. | 12 | Jaffna College Prize Giving Women's Centre Anniversary |
| | 19 | Uduvil Founder's Day |
| | 24 — 26 | Diocesan Council Sessions |
| | 27 | Palm Sunday |
| | 31 | Maundy Thursday |
| April | 1 | Good Friday |
| | 3 | Easter |
| | 23 | Youth Camp (Under 21) |
| May | 15 | Asia Sunday |
| | 19 — 21 | Whitsun Festival (Ashram) |
| June | 4 | Evangelistic Festival |
| | 5 | Bible Quiz |
| July | 16 | Children's Rally |
| Aug. | 21 | Ashram Anniversary |
| Oct. | 1 | Diocesan Festival |
| | 15 | Christian Home Festival |
| Dec. | 11 | Sunday School Examination |
| | 25 | Christmas Day |

## Scout Anniversary this year

The 70th Anniversary of Scouting in Sri Lanka and the 75th Anniversary of World Scouting will be celebrated in Sri Lanka from February 27 to March 4 this year.

The highlight will be the Third National Jamboree which will be held at Anuradhapura at which over 3000 scouts from Sri Lanka and 500 scouts from overseas representing fifteen countries of the Asia Pacific Region will participate.

The theme of the celebrations is:— "Scouting markes a better world".

## Bishop Wickremasinghe at Birmingham

According to a news item we have received from Britain from one of our readers, the Rt. Rev. Lakshman Wickremasinghe, the Bishop of Kurunegalle was the preacher at the Longbridge Church, Birmingham on Sunday, 12th of December.

The service was well attended by Sri Lankans who live within a 30 miles radius. Following the Service, there was a Fellowship Tea in the Church Hall where the Sri Lankans had an opportunity to meet the Bishop.

The Bishop in his sermon referred to the Book of Daniel where there are four Kingdoms mentioned, the Kingdom of the Lion, the Kingdom of the Bear, the Kingdom of the Leopard and the Kingdom of the Beast which in turn symbolise Power, manipulation, discrimination and resentment.

There is re-birth of Christ in our lives only when we do not allow power to override all other interests when we do not manipulate or allow ourselves to be manipulated, when we do not discriminate on colour, cast, race or class and when we do not keep on rejecting our *fellow* beings because of our resentment.

## Christian Editors and Writers Conference

What is the purpose of Christian periodicals? Is it a bulletin of the Church for the Church. These were some of the questions that were posed at an Editors and Writers Conference held at CMS High School, Kottayam recently.

Some of the findings of the Conference were that a Christian magazine is not "a magazine of the minority for the minority but a magazine of the minority for the majority". It should have a message to give to the world i. e. to the majority of non-Christians.

## Exodus of Labour to Middle East

The minimum salary offered to a labourer in Saudi Arabia is 120 US Dollars or Rs. 2640 inclding free food, lodging and a ticket to Sri Lanka every year. 2500 Sri Lankans are already employed in Saudi Arabia, according to Mr. Philip W. Eagle, Projects Co-ordinator of a firm in Saudi Arrbia who was recently in Sri Lanka to interview recruits. Some 1500 were recruited in December, 1982.

The basic qualifications are a good knowledge of spoken English and ability to adapt to harsh environment.

# உதயதாரகை
## UTHAYATHARAKAI
Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 143 ] 7 — 1 — 1983 [ இதழ் 1

# தை பிறந்தால் வழி பிறக்கும்

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது தமிழ் மக்களின் நம்பிக்கை. பல மாதங்களாகத் தமது பிரச்சினைகளுக்கு விடிவு தோன்றாத பொழுது, "தை பிறக்கட்டும் பார்ப்போம்!" "தை பிறந்தால் ஒரு வழி திறவாமல் போய்விடுமா?" என்று கூறிக்கொள்வது மரபு.

பல்லாண்டு பல்லாண்டு பாலைவனம் போல் இருந்த தமிழ் மக்கள் வாழ்விற்கு மீண்டும் தை பிறக்கிறது! சென்ற வருடம் தமிழ் மக்கள் பலவிதமான கஷ்டங்களுக்கூடாக வாழ்ந்துவந்தனர் சில நாட்கள் மரண இருளின் பள்ளத்தாக்காகவே இருந்தது. ஜனாதிபதித் தேர்தல் அதனைத் தொடர்ந்து வந்த சர்வஜன வாக்கெடுப்பு குருமார் கைது முதலியன தமிழ்மக்கள் உள்ளத்தில் கேள்விக்குறியை தோற்றுவித்தன இனிவரும் காலங்கள் எப்படியோ என்று சிந்திக்கவேண்டிய கட்டத்திற்குத் தள்ளப்பட்டனர்.

புதிய வருடம் சில நல்ல நம்பிக்கைகளைத் தோற்றுவித்திருக்கிறது. தனி நாடு கோரிக்கையைத் தடை செய்ய முடியாது என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட மதகுருமார் விஷயத்தில் கெடுபிடி தளர்த்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. உதவி ஜனாதிபதிகள் சிறுபான்மைச் சமூகத்தவரை கௌரவிக்குமுகமாக வழங்கப்படவிருக்கின்றன.

நல்ல அறிகுறிகள், தமிழ்நாடு கோரும் அளவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று 1977-ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது கூறியவர் நமது ஜனாதிபதி. தமிழ் மக்களின் அபிலாஷைகளை, ஏக்கங்களை ஏமாற்றங்களை அவர் அறியாதவரல்லர். புதிய அணுகுமுறை தமிழ் மக்கள் உள்ளத்தில் அமைதியைக் கொண்டுவந்துள்ளது.

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற நம்பிக்கை மீண்டும் துளிர் விடுகிறது.

---

## செய்திச் சிதறல்

### கேல்வத்தை செபாலயம் திறந்துவைக்கப்பட்டது

சென்ற மாதம் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணியளவில் கேல்வத்தையில் புதிதாக அமைக்கப்பட்ட செபாலயம் திறந்து வைக்கப்பட்டது. மகாகனம் சபாபதி குலேந்திரன், ஆராதனையைப் பிரதிஷ்டை செய்துவைத்தார், திருமறைப் பாடங்கள் சுவிசேடக அலுவலர் வண. S. மனோபவனினாலும் அளவெட்டித் திருச்சபையைச் சேர்ந்த திருமதி S. தங்கராசாவினாலும் வாசிக்கப்பட்டன. பண்டத்தரிப்புச் சபையைச் சேர்ந்த திருமதி R. B. தங்கராசா பிள்ளைகளுக்கு ஒரு அரிய உபந்நியாசம் செய்தார், பிற சபைப் பிள்ளைகளின் பாடல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன; சிற்றுண்டி பரிமாறலுடன் விழா இனிது முடிவுற்றது.

### K. J. செல்வராசன் வீட்டில் ஆராதனை

இங்கிலாந்தில் டிச. 17-ல் காலமாகிய கைதடி நவீலட்பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு. K. J. செல்வராசன் வீட்டில் அவர் அடக்கப் பண்ணப்பட்ட தினமான 21-12-82 அன்று ஒரு ஆராதனை அராலியில் உள்ள அவரில்லத்தில் நடைபெற்றது. வண. S. N. சுகுணானந்தன், வண. J. J. இரத்தினராசாவின் உதவியுடன் இவ்வாராதனையை நடத்தினார். யாழ் கல்லூரி அதிபர் திரு A. கதிர்காமர் பாராட்டுரை வழங்கினார்.

### காங்கேசன்துறைத் தேவாலயத்திற்கு மின் இணைப்பு

காங்கேசன்துறைத் தேவாலயம் நத்தார் தினத்தன்று மின் ஒளி பெற்றது. புதிதாக அமைக்கப்பட்ட மின் விளக்குகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. 25-12-82 மாலை நடைபெற்ற இவ்வாராதனையை வண. D. R. அம்பலவாணர், வண. N. W. G. சுகுணராசா, வண. சாம். தம்பு ஆகியோரின் உதவியுடன் நடாத்தினர். ஐக்கிய திருவிருந்தில் அனைவரும் பங்குபற்றினர்.

## மணமக்கள் வாழ்க

சென்ற திங்கட்கிழமை (27-12-82) உடுவிற் தேவாலயத்தின் கனம் N. W. G. சுகுணராசா அவர்களினாலும் சேவக் சாம் அல்பிரட் அவர்களின் உதவியுடன் ஒரு பரிசுத்த விவாகம் நிறைவேற்றப்பட்டது. மணமகன் மாவிட்டபுரம் ஹேஸ்டிங்ஸ் தம்பதியரின் மகன் விஜயேந்திரன் அவர்கள். இவர் மகாராஜா நிறுவனத்தின் உற்பத்தி முகாமையாளர். மணமகள், உடுவில் C. E. இராசசிங்கம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரி தயாவினி கனம் D. R. அம்பலவாணர் அவர்கள் மணமக்களுக்கு நல்லுபதேசம் கூறினார்.

டிசம்பர் மாதம் 27-ம் திகதி காலை சுண்டிக்குளி பரியோவான் தேவாலயத்தில் ஒரு பரிசுத்த விவாகம் நடைபெற்றது மணமகன், காலஞ்சென்ற மில்ஸ் போதகர் திருமதி நவமணி மில்ஸ் அவர்களின் புதல்வன் திரு குலநாயகம் மில்ஸ் மணமகள் சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. C. E. ஆனந்தராஜன், திருமதி ஆனந்தராஜன் அவர்களின் சிரேஷ்ட புதல்வி சொர்ணவதி. கனம் ஜோ, சர்வானந்தன், வண. சாம் ஹெசிங்டனின் உதவியுடன் விவாக ஆராதனையை நடாத்தினார். வண. S. மனோபவன், மணமக்களுக்கு நல்லுபதேசம் கூறினார்.

# "வார்த்தையானவர் மாம்சமானார் நம்மிடத்தில் தங்கியிருந்தார்"

— R. K. தியாகராசா —

1. "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது." பரி. யோவான் இவ்வாறாகத் தனது சுவிசேஷத்தை ஆரம்பித்து வைக்கின்றார். யார் இந்த யோவான்? இவரின் தகுதி என்ன? ஆதாரம் என்ன? குடும்பச் சிறப்பு என்ன? இவர் இயேசு கிறிஸ்துவின் அன்பான சீஷன் என்பதுதான் நமக்குக் கொடுக்கப்பட்ட அறிமுகம், கல்வாரியிலே சிலுவையில் தொங்கும் போது தம்முடைய தாயையும் அருகே நின்ற சீஷனையும் நோக்கி "ஸ்திரியே அதோ உன் மகன் என்றும், அதோ உன் தாய் என்றும் தன் தாயை இவரிடம் ஒப்புவித்ததையும் அறிவோம். பன்னிரண்டு வருடங்கள் அந்தத் தாய் இந்த மகனோடு தங்கியிருந்தார் எனவும் அறிகின்றோம்.

2. கடவுள் கர்த்தாதி கர்த்தன் சிறியவர் ஆனார். மனித உருவை எடுக்கும் அளவுக்கு சிறியவர் ஆனார். மனித வாழ்க்கையை வாழும் நிலைமைக்கு அச்சிறுமை அவரைத் தாழ்த்தியது; சார்ள்ஸ் வெஸ்லி

"கடவுள் ஒரு சாண் அளவாய்ச் சுருங்கி மனிதன் ஆனார் மாவித்தையல்லவோ" என்று பாடியுள்ளார். இன்னோர் கவிஞர் "நீர் ஓர் பாலகனாய்ப் பிறக்குங்கால் ஒரு பெண்ணை அழைச் செய்தீர்" எனக் கூறியுள்ளார். பெத்லகேமிலுள்ள, கிறிஸ்து பிறப்பின் ஆலயம் ஒரு சிறிய குகைதான், அஃது ஒரு பெரிய பைசான்டைன் ஆலயத்தினுள்ளே இருக்கிறது. பாதையால் செல்வோரின் பார்வைக்கு ஒரு பெரிய உயரமான சுவர் மாத்திரம் தெரிகிறது. அதன் பின்புறத்தில் ஒரு ஆலயம் இருக்கிறதை சாதாரணமாய்க் காண முடியாது. அந்தச் சுவரில் இருக்கும் ஒரு சிறிய கதவினூடாக அதிகமாய்க் குனிந்துதான் உட்செல்ல முடியும். கிறிஸ்துவின் பிறப்பிற்கு சிறுமைப்பட்ட பிறப்பிற்கு இது நல்ல அடையாளம்.

3. கடவுள் மனிதனுக்குப்படி மிகவும் பணிய வேண்டியுள்ளது. இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த காட்சி மாத்திரமல்ல. "இதோ வாசற்படியில் நின்று தட்டுகின்றேன் ஒருவன் என் சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து...... ......அவனோடு போசனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போசனம் பண்ணுவான்" வெளி 3;20. நம்முடைய வாழ்க்கையினுள் கடவுள் பிரவேசிக்க வேண்டுமாயின் அவர் எவ்வளவு சிறியவராய் ஆகவேண்டும், எந்த மனிதனாய் இருந்தாலும் அவர் அவனுக்கேற்றவராய தன்னைச் சிறுமைப்படுத்த வேண்டும்.

4. கிறிஸ்மஸ் நமக்குப் பல அடையாளங்களை வெளிப்படுத்தியிருக்கின்றது. முதலாவது குடிமதிப்பு இது ஓர் விசேட சம்பவம். ஒரு குடி மதிப்பின் காலத்திலே இயேசு பிறந்தார். ஆகவே கடவுள் மனிதரில் ஒருவராய்க் கணக்கெடுக்கப்பட்டார். இயேசுவில் கடவுள் மனிதனாகவே இருக்கின்றார். நமக்குரிய கிறிஸ்மஸ் ஈஸ்டருக்குப் பின்வந்த கிறிஸ்மஸ்தான் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே மானிடக் கிறிஸ்து. பரத்துக்கேறினவரும் அவ்விதமானவரே. மனுஷகுமாரன் கடவுளின் வலது பாரிசத்தில் நிற்கிறதை ஸ்தேவான் பார்த்தான். ஸ்தோத்திரித்தான். நமக்கதை வெளிப்படுத்தினான். இயேசுவில் கடவுள் சாதாரண மனிதத் தன்மையை அணிந்து கொண்டார். இயேசு எல்லா மனிதருக்கும் உரியவர் ஆனார். இயேசு நாசரேத்தூர் தச்சன். ஆனால் கல்வாரியில் விதைக்க பட்டபோது அந்த விதை முளைத்தது. மரத்தின் கிளைகளை உலகத்து மக்கள் தமது இளைப்பாறுமிடமாக்கிக் கொண்டார்.

5. கிறிஸ்மஸ் சம்பவத்தின் இரண்டாவது அடையாளம் முன்னணை. கடவுளுக்கு ஒரு முன்னணை தான் கிடைத்தது, ஆகிலும் அவர் வந்தார். நாம் நம்மைக் கடவுளுக்கு அர்ப்பணஞ் செய்யும் வரை அவர் காத்திருப்பதில்லை, திறந்துள்ள எந்த வாசலாலும் அவர் வந்துவிடுகிறார். உள்ளே வந்த பின்பு அவர் மெதுவாகவும் பரிபூரணமாகவும் நம்மை ஆட்கொள்ளுகின்றார். அராபியனும் ஒட்டகமும் என்ற ஒரு கதையிலே ஒட்டகம் கூடாரத்தை முழுவதுமாக ஆக்கிரமித்தது போல நம்மை அவர் ஆட்கொள்ளுவார், இயேசுகிறிஸ்து ஆண்டவராக மாத்திரமல்ல பணிவிடைக்காரனாகவும் நம்மிடம் வருவதினால் நாம் தம்மை அழைக்கும்வரை காத்திருப்பதில்லை. நாம் அவருக்குக் கொடுக்குமிடம் புறம்போக்கான முன்னணையானாலும் அவர் அதனுள் வருகிறார். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நம்மை ஆட்கொள்ளுகிறார், இதற்கு தர்சு பட்டணத்து சவுலே சாட்சி. இந்த உலகின் அளவுகோலின்படி பெரியோராய்க் கருதப்படுவோர், தங்கள் உரிமைகளை தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என வற்புறுத்துவர். ஆனால், இயேசு தம்முடைய மகிமையை எல்லாம் மறைத்து சிறுமையின் ரூபமாய் ஒதுக்கிவிடப்பட்ட முன்னணையிலே எந்த ஆயத்தமுமில்லாத நிலையிலே வந்தார், பத்துக் கன்னிகைகள் மணவாளன் தாமதித்து வருவார் என நம்பிய நிலையில் வந்தார். எஜமான் பிந்தி வருவார் என வேலைக்காரர்கள் குடித்துக் கும்மாளமிட்ட வேளையில் வந்தார். லாசருவின் மரணத்திலே ஆனி அவர் வருவதால் பிரயோசனம் இல்லை என்ற நேரத்திலே வந்தார். ஆகவே விழித்திருங்கள்.

6. கிறிஸ்மஸின் மூன்றும் அடையாளம் தாயார். கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தபோது வீதிதிரிந்த காவல்காரி கன்னி மரியாளே. அவர் தம் அடிமையின் தாழ்மையைக் கண்ணோக்கினார். பெரிய இடத்தைத் தேடியிருக்கலாம் எனினும் என்னிடம் வந்தார். கடவுளுக்கு எவரும் சிறியவர் அல்லர். அவருக்கு எல்லோரும் தேவைப்படுகின்றனர். நம்மால் பெரிய காரியத்தைச் சாதிக்க முடியாமலிருக்கலாம். ஆகிலும் ஒரு சிறிய காரியத்தையாவது செய்ய அழைக்கின்றார், நாம் விழித்திருக்க வேண்டும். அழைப்பு எப்போ வரும், என்ன ரூபத்தில் வரும் அது நமக்குத் தெரியாது. ஆகிலும் நாம் அழைப்புக்குக் காத்திருக்க வேண்டும்.

7. கிறிஸ்மஸின் நான்காம் அடையாளம் நட்சத்திரம். கடவுள் சாஸ்திரிகளிடத்தில் அவர்களின் ஞானத்திற்கு தக்கதாகப் பேசினார். நாம் விளங்கக்கூடிய அடிப்படையில் நம்மிடம் பேசுவார். ஆனால் அவர் வேறோர்

(3-ம்பக்கம் பார்க்க)



பேராசிரியர் சந்திரன் தேவநேசன்
1981-ம் ஆண்டு வட்டுக்கோட்டையில் நடைபெற்ற யாழ். கல்லூரி பழைய மாணவர் சங்க நூற்றாண்டு விழாவில் பேசியபோது எடுக்கப்பட்ட படம்.

# பேராசிரியர் சந்திரன் தேவநேசன் மறைந்தார்

சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியின் முன்னாள் அதிபரும், வடகீழ் மலைப் பிரதேசப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், சிறந்த பேச்சாளருமான பேராசிரியர் டாக்டர் சந்திரன் தேவநேசன் சென்ற மாதம் 19-ம் திகதி மாரடைப்பினால் காலமானார்.

சந்திரன் தேவநேசன் தென்னிந்தியாவின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்களில் ஒருவர். சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியில் விலங்கியற் பேராசிரியராகவிருந்த தேவநேசன் அவர்களின் புதல்வன். சந்திரன் தனது இளமைக் கல்வியை கண்டிக் கிங்ஸ்வூட் கல்லூரியில் முடித்துக்கொண்டார். பின்னர் சென்னை கிறிஸ்தவ கல்லூரியிலும், கேம்பிறிச் பல்கலைக் கழகத்திலும் கற்று, சென்னை கிறிஸ்தவ கல்லூரியின் பேராசிரியரானார். அமெரிக்காவிலுள்ள Harward பல்கலைக்கழகத்தில் மகாத்மா காந்தியின் வாழ்க்கையை ஆராய்ச்சி செய்து "The Making of the Mahatma" என்ற ஆய்வுரையைக் கலாநிதிப் பட்டத்திற்குச் சமர்ப்பித்தார்.

சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில் அவர் புகழ் உலகமெங்கணும் பரவியது. M. C. C. இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக் கழகக் கல்லூரியென்று போற்றப்பட்டது. இதனால் இந்திய அரசு சாதனை வீரரான சந்திரன் தேவநேசனைப் புதிதாக அமைக்கப்பட்ட வட கீழ் மலைப் பிரதேச பல்கலைக்கழகத்தின் (North Eastern Hill University) துணைவேந்தராக நியமித்தது. அங்கிருந்து இளைப்பாறிய பின்னர் சந்திரன் சென்னை திரும்பி, "பிரஜா வளர்ச்சி" என்ற ஸ்தாபனத்தின் இயக்குனரானார். இந்தப் பணியை நடத்திக்கொண்டிருக்கும்பொழுதுதான் அவர் இந்த உலகை விட்டுச் சென்றார்.

பேராசிரியர் சந்திரன் அவர்கள் இலங்கையின் முதுபெரும் இடதுசாரியான லெஸ்லி குணவர்த்தனாவின் தங்கையைத் திருமணம் செய்துகொண்டார். இலங்கை மக்கள் மீது மிகுந்த அன்பும் ஈடுபாடும் உடையவர்.

"குமுதம்" பத்திரிகையின் "அரசு பதில்கள்" இந்தியாவின் தலைசிறந்த ஆங்கிலப் பேச்சாளர் மூவரில் ஒருவர் பேராசிரியர் சந்திரன் தேவநேசன் என்று குறிப்பிட்டது. ஆங்கிலத்தின் உச்சரிப்பு, கருத்தாளம் கேட்பார் சிந்தையினிக்க செவியினிக்கப் பேசும் மாண்பு எல்லாவற்றிலும் சந்திரனுக்கு நிகர் சந்திரனே தான்.

1981-ம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க நூற்றாண்டு விழாவிற்கு வருகைதந்து, தமது பேச்சினால் நம்மையெல்லாம் பரவசப்படுத்தினார். அன்று அவர் ஆற்றிய உரை The Aims of Higher Education என்ற உரை பழைய மாணவர் சங்கத்தினால் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்த உலகின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவர் மறைந்து விட்டார். அவருடைய வாழ்வு கிறிஸ்தவ சமுதாயத்திற்கு உந்துதல் அளித்துக் கொண்டேயிருக்கும்.

— S. J.

## சரித்திரத்தில் ஒரு சம்பவம் – 5

### எபிரேய மொழியில் புதிய ஏற்பாடு

(24-12-82 இதழ் தொடர்ச்சி)

ஆதிக் கிறிஸ்தவர்கள் "இந்த மார்க்கத்தார்" என அழைக்கப்பட்டனர்; அவர்களுடைய சமயமும் "இந்த மார்க்கம்" என்று தான் அறியப்பட்டது. அதாவது, அந்தியோகியாவிலே கிறிஸ்தவர்கள் என்ற பெயர் முதல்முதலாக அவர்களுக்கு வழங்கப்படும் வரையும். இவ் வழக்கை மனதிற் கொண்டு LIVING BIBLE அல்லது ஜீவனுள்ள வேதாகமம் என இலேசான எபிரேய மொழியில் திருப்பப்பட்ட இப் புதிய ஏற்பாடு "வழி" எனப் பெயரிடப்பட்டுள்ளது. பல மொழிகளிலும் திருப்பப்படும் இந்த புதிய திருப்புதல் படிப்பதற்கும் விளங்குவதற்கும் மிகவும் எளிதானதும் பிழையற்றதுமான மொழி பெயர்ப்பாகும் என அறிஞர் கூறுகிறார்கள்.

கதை ஆதாரம் —
ஜீவ தோகமச் செய்தி" சஞ்சிகை

## வார்த்தையானவர்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் ஆரம்பிக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். யூதர்கள் ஏன் அவரை வெறுத்தனர். தாங்கள் எதிர்பார்த்த வகையாக மேசியா தோன்றவில்லையே என்ற பிரபஞ்ச ஞானத்தினால் அல்லவா. அட்வெந்து காலத்தில் நாம் இவைகளை நினைவுகூர்ந்து செயல்படுவதற்காகத் திருச்சபை விழிப்பாயிருக்கின்றது. திருச்சபையின் நோக்கமும் நமது நோக்கமும் ஒன்றாக வேண்டும். இதுவே நாம் காட்டக்கூடிய சாட்சி. ஆனால் இக்காலங்களில் கிறிஸ்தவர்கள் மற்ற மதத்தவர்களைப் பின்பற்றி படாடோபத்திலும் பகட்டிலும் தாழ்மையின் சின்னத்தை அன்பின் இன்னத்தை மறந்துவிடுகின்றோம். இந்த நாட்களுக்குரிய தமது தியானம் அன்போடு கூடிய தாழ்மையே. அதே நேரத்தில் கிறிஸ்து இராசாவாகவும் நமது சீவியத்தில் பிரவேசிக்க விரும்புகின்றார், குதிரையில் பவனி வரும் இராசாவாக அல்ல கழுதையில் பவனி வரும் இராசாவாக வரும் அவரை நமதில்லங்களில் ஏற்றுக்கொள்வதே நமது கடமை. வார்த்தையானவர் மாம்சமானார். நம்மிடத்தில் தங்கியிருந்தார் என்பதே நமது சாட்சியாகும்.

## மீட்பன்

இடையன் நல்ல இடையன்
அவன் ஒருவன் நமது மீட்பன்
இடையன்........................

குளிர் மூடிய வேளையிலே
குழந்தை வடிவாக வந்தான்
நித்திய ஜீவந்தர இங்கே
சத்திய வேதமாய் வந்துதித்தான்
சத்திய வேதமாய் வந்துதித்தான்

இருள் மூடிய பாதைகளில்
வழி தேடி அலைந்திடுவோர்
வழி பார்த்து நடந்திடவே
ஒளி யாகியே வந்துதித்தான்
ஒளி யாகியே வந்துதித்தான்

அருள் அழிந்திடும் போதினிலே
அன்பின் மகவதுவாய் வந்தான்
இன்ப வழியது நிலைத்திடவே
இங்கு மனுவுருவாய் வந்தான்
இங்கு மனுவுருவாய் வந்தான்.

— பாவலர் கிராஸ்ஜீவன் —



கனகம் சுப்பிரமணியம்
தோற்றம்: 7-10-1911
மறைவு: 8-1-1979

வானத்திலே ஒன்று கூடிடும் நாள் விரைவில் நெருங்கிட ஸ்தோத்தரிப் போமே.

கணவன், மக்கள், மருமக்கள்.

## யாழ்ப்பாணத்துக் கவிஞர் பிரக்கன்றிஜ்

— பரிவின்பன் —

திரு. எமில் ஜெபசிங் எழுதியுள்ள 'பொங்கி வரும் அருள் மனிதரை மாற்றிடுதே' என்ற பாடலில் வரும்,

'தீயவர் திருடரும் கொடியவர் கொலைஞரும்
இயேசுவின் மாற்றம் பெற்றார்...'

என்னும் வரிகளைப் பாடக் கேட்கும்போதெல்லாம் எனக்கு இரண்டு பேருடைய நினைவு வரும். இருவரும் கொலைக் குற்றத்திற்காக மரண தண்டனை பெற்றுச் சிறைக் கைதிகளாக இருந்த காலத்தில் ஆண்டவரைத் தங்கள் மீட்பராக ஏற்றுக்கொண்டவர்கள்.

ஒருவர் —

பாலகிருஷ்ணன் என்பவர், தூத்துக்குடியில் டாக்டர் மாசுதம் குடும்பத்தார் கொலைக்கு முக்கிய காரணமாக இருந்தவர். பயங்கரக் கொலைக்காரன் என்ற காரணத்தால் தூக்குத் தண்டனை பெற்று வேலூர் மத்திய சிறையில் இருந்தபோது திரு. டேவிட்ஸன் ஆமோஸ் அவர்கள்மூலம் புதிய ஏற்பாட்டைப் பெற்று வாசித்து மனம் மாறியவர். இது உண்மையான மனமாற்றமா என்று சிறை அதிகாரிகள் சந்தேகப்பட்டார்கள். தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்பு பாலகிருஷ்ணன் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள விரும்பினார், அருள்திரு. டிக்கிஸ் அவர்கள் பாலகிருஷ்ணனுக்குப் பால் கிருஸ்டியன் எனப் பெயர் சூட்டினார்கள். தூக்குமேடைக்குப் போகும் போது மகிழ்ச்சியோடு புதிய ஏற்பாட்டைக் கையில் ஏந்திக்கொண்டு நம்பிக்கைப் பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டே நடந்தார் பால் கிறிஸ்டியன், இந்தச் சம்பவம் நடந்து ஏறத்தாழ 25 ஆண்டுகள் ஆகின்றன.

மற்றொருவர் —

பால் கிறிஸ்டியனைப் போன்றே யாழ்ப்பாணத்தில் கொலைக் குற்றத்திற்காகத் தூக்குத் தண்டனை பெற்றுச் சிறைச்சாலையில் இருந்தவர். நற்செய்திப் பணியாளர் ஒருவர் அவரைச் சந்தித்து அவரோடு உரையாடிய போது 'இயேசு உம்மை நேசிக்கிறார்' என்று கூறினார். இதைக் கேட்டதும் அந்தக் கைதி 'என்னை ஒரு பொருட்டாக மதித்து நேசிக்கக் கூடியவர்களும் இருக்கிறார்களா?' என்று வியந்து அவரிடம், உண்மையாகவா? உண்மைதானா? என்று கேட்க, அந்த நற்செய்திப் பணியாளர், 'உண்மையாகத்தான். இந்தப் புத்தகம் அதைத்தான் சொல்கிறது' என்று அவரிடம் திருமறையின் மேல் தம் கையை வைத்துக் கூறினார்.

(தொடரும்)

## Prospect, 1983

The first few days of the new year has brought to the fore again some of the country's awesome problems.

"Tamils in the mainstream of national politics" is an elusive title of a news item which appears in the *Sunday Observer* (2-1-83) reporting a speech made by the President of the UNP Colombo Youth League, in Colombo.

The speaker has made the somewhat startling disclosure that a 'think-tank' consisting of leading Tamil citizens of Colombo has been set up in the Western Province to deal exclusively with the problems affecting the "minorities in Colombo", without reference obviously to the interests of Tamils in the other parts of the country.

We were at once reminded of an Editorial in *Forward* (15-12-82) entitled "Backwards March!" which listed certain trends in the country which appeared to drive the people back to the pre-independent era when 'divide and rule' was a convenient method by which our colonial rulers maintained hegemony over the country.

It is not without significance that the meeting, according to the news item, was held at Wellawatte, the nerve centre of the Tamil community in Colombo, on 31-12-82, only eight days after the announcement of the results of the Referendum.

The meeting, perhaps, was intended as an occasion for stock-taking on the role the Tamils have played in the "mainstream of national politics" with particular reference to the Referendum in Sri Lanka held on 22-12-82.

Minister Thondaman, however, seems to have taken a more realistic view of the situation in contrast to the emotional approach of the President of the UNP Colombo Youth League who wishes, at any cost, to retain a larger slice of the national cake to the Colombo Tamils.

The Minister appears to have been swayed by the feeling so beautifully expressed by Seneca in his "Letters to Lucillius":— "Even after a bad harvest, there must be sowing".

The verdict of the Referendum in the electoral districts of Jaffna and Batticaloa, as we now know, indicated a striking similarity in gradient in the voting pattern, exploding the myth which has been built up over a period of time, that the people of the Eastern and Northern provinces are poles apart in their political views and convictions.

According to the news item in *Eelanadu* (2-1-82), Minister Thondaman has led a deputation to the President Jeyawardene urging him that he considers the problems affecting the Tamils of the North and East comprehensively and not in seperate water-tight compartments as it has been done hitherto.

We appreciate the principle underlying this move made by a Minister who has always been forthright and fearless in expressing his convictions, however, unsavoury it may be to some of his colleagues.

The Batticaloa verdict on the Referendum has ruffled feathers among an influential section of political leadership in the Eastern Province and wo do not know to what extent Minister Thondaman will succeed in his well-intentioned efforts.

Whatever success attends his efforts, the Government owes a debt of gratitude to the Minister for bringing to the surface the deeply embedded canker in our body-politic in Sri Lanka, of creating "myths" with regard to the problems of the Tamil community and then weaving round those "myths" policies and plans affecting the future of the community. One such "myth" that went round during the Referendum campaign was that a vote for the 'pot' was a vote for '*Eelam*'.

"Moves to appease the Tamils of the North" is again the bold headline" of a news item in *The Island* (3-1-83) which gives prominence to another development by which the government is being persuaded to effect "a concessionary approach" to the terrorist problem in the North.

But, is it enough that Ministers of the government or other parties or organisations influential with the government, just feel a mite uneasy about the anti-terrorism laws as it operates today in the North of the country?

The year 1983 to be fruitful should be an year when we should see certain things sharp and plain. The most important of them all is that the road to peace has never been through appeasement or negotiation from weakness.

Chauvinistic arrogance has not paid dividends in party politics in any democratic state. In the context of the complex issues which confront the nation today, supporters of the government have a tremendous responsibility to *harmonise* conflicting interests rather than promote the interests of their own group.

As a Christian Weekly, we are happy that we have now at the helm a strong leader. We are also happy that the new Parliament will be a body with 198 members. But this new accession of power and strength throws on the President and the Parliament, which the President will control, in greater measure than before, an awesome responsibility.

For, as *Aristotle*, the celebrated Greek Philosopher, has put it:— "What lies in our power to do, lies also in our power not to do."

## The TULF Resignations

The TULF decision on whether its Members of Parliament will withdraw from Parliament in August 1983, will be made, according to news reports, at the Annual Convention in Jaffna in April this year. The TULF members have already submitted their letters of resignation to the Secretary General of the party.

The following is a significant comment by *Tribune* (18-12-82):—

"As the law stands today, the Secretary General of the TULF will be able to fill the vacancies with the party's new nominees. But the President has declared that if the TULF resigns en masse he will amend the constitution and hold by-elections for all the TULF vacated seats. This is to make it difficult for the TULF to eat the cake and have it, to oppose the referendum to please the extremists and the Eelamites and continue in the new Parliament with its own nominees as MPs.

Thus the TULF leadership is caught is a cleft stick between the Eelam extremists (who want no truck with Sinhala dispensations and constitutions) and its own parliamentary ambitions even to be an integral part of a JR— proposed National Government (no doubt to push it to make concessions to the Tamil extremists)."

## Grade One Admissions

Over 250,000 students will be admitted to Grade One when schools re-open for the New Year this year on 17-1-83. An average of 15 new buildings, it is learnt, have been provided in every educational district. Priority is given to the area rule and to children whose parents are old students of the school.

In the case of Government Schools, the School Development Boards are in overall charge of admissions while in Private Schools, there is a Board which advises the Principals on the admissions.

The Government has also made provision for an Appeals Board to which parents with special problems can appeal. The government policy is to give admission to all students of school going age, although the parent's choice cannot be satisfied in all cases.

## Emigration hits an all-time high

The exodus of approximately 6.9 persons per thousands of the country's population boosted Sri Lanka's migration figures in 1980/81 to a new high with the exodus of Sri Lanka nationals out-stripping the hitherto largest migration group — the South Indian estate labour population.

The new trend has appreciably offset part of the natural population expansion despite which the 1981 growth rate of 1.7 per cent indicated a continuity in rapid population growth in Sri Lanka. The 1981 census disclosed a population of 14.9 million against 14.7 million in 1980.

Net migration figures for 1980/81 approached 225,000 persons while the population growth stood at 250,000 persons for 1981 raising the density of population per square kilometre to 228 persons. A breakdown of the density shows a population of 816 persons per square kilometre of cultivated lands.

Island 8-12-82

## *An Appreciation*

### Mr. K. Chelvarajan

It was with much grief I heard of the demise of Mr. Chelvarajan on the 19th of December 1982 in U. K. It was a few days ago I read in one of the Christian Weekly News Papers, The Morning Star, that Mr. Chelvarajan had given away one of his daughters in marriage and that he had specially chosen the hymns for the occasion.

Mr. Chelvarajan was the son of a Pastor and has imbibed the true Christian spirit from his early days. To him "Duty was sacred" and "work was pleasure". He was a dedicated teacher of English and he taught his students with clarity and confidence. He was always of a cheerful disposition and never spoke an unkind word. He was a master in the art of teaching Phonetics. The subject was almost at his finger tips. Those who learned it grasped it well. His main concern was the welfare of his students. Even when he lay in painful agony after surgery at the Jaffna Hospital, he told us, his students to come to his house and that he would help us through our difficulties. When I informed my fellow students of his sudden death, many of them gathered in my house af if I had lost some-one close and dear. His death is an irreparable loss to everyone who was associated with him. We can do nothing except console one another.

He was not merely teaching English but exhorted us to live a humble and dedicated life. He was a friend, philosopher and guide to all his students. He leaves behind lingering memories to his students. His exemplary life, Christian Principles and dedicated teaching have earned for him a permanent place in the line of noble men who have adorned the field of Education. In this context, I am reminded of Shakespear's lines: —

"His life was gentle, and
the elements
So mixed in him that
Nature might stand up
And say to all the world,
This was a man!"

May his Soul rest in Peace.

RENUKA NAVARATNAM.

[*This is a tribute from one of the students of Mr. Chelvarajan, at the Poly Technical Institute in Jaffan. The writer is a non-Christian.*] — Editor.

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB./59/300/26/82.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 7th January 1983 and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna.